தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**7 வயதுப்பிரிவு**
(01.01.2014 – 31.12.2014 வரையில் பிறந்தோர்)

## காந்தள் மலர்

கார்த்திகைத் திங்களிலே மலரும் காந்தள் மலரைக் கார்த்திகைப் பூ என்றும் அழைப்போம். எம் தேசிய வண்ணங்களாம் மஞ்சள், சிவப்பு வண்ணங்களிலே இது மலரும்.

காந்தள் மலர், கிழங்கிலிருந்து முளைத்துப் பூத்துப் பின் மடிந்து, நிலத்தின் கீழ் உயிர் வாழ்ந்து, மீண்டும் கொடியாகிப் பூத்துக் குலுங்கும். 'விழவிழ எழுவோம்' எனும் எம் வீரர்களின் வேட்கை போல, இம்மலரும் விழவிழ எழுகின்றதல்லவா!

காந்தளுக்கு இன்னுமொரு சிறப்பும் உண்டு. கழுத்திலே நஞ்சணிந்து அஞ்சாத நெஞ்சினராய்க் களங்கண்ட எமது மாவீரரைப் போலவே தனக்குள்ளும் நஞ்சு சுமந்து எழுச்சியுடன் விரிகின்றது காந்தள் மலர்.

மாவீரத் திங்களாம் கார்த்திகையில் மலர்வதாலும், தமிழீழத் தாய்நாட்டின் தேசிய வண்ணங்களைக் கொண்டதாலும், மீண்டும் மீண்டும் உயிர்ப்புடன் எழுவதாலும் காந்தள் மலரைத் தமிழீழத்தின் தேசிய மலராக்கினார் எங்கள் தலைவர் மாமா.

கல்லறை மேனியரைத் தழுவுதற்காய் உயிர்ப்படையும் காந்தள் போல, நாமும் மாவீரர் கனவாம் தமிழீழ மண்ணை மீட்போம் என்று அவர்களைத் தொழுது எழுவோம்.

நன்றி,

வணக்கம்.